# வாசகர் செயல் வட்டங்கள்

## இலகுபடுத்துனர் கையேடு



விழுது

ஆற்றல் மேம்பாட்டு மையம்

இல. 03, ரொரிங்ரன் அவனியு, கொழும்பு - 07.
தொ.பேசி : 011 - 2506272

ஒக்டோபர் 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்
# செயல் வட்டங்கள்

## இலகுபடுத்துனர் கையேடு

விழுது
ஆற்றல் மேம்பாட்டு மையம்

ஒக்டோபர் 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : ***வாசகர் செயல் வட்டங்கள்***
இலகுபடுத்துனர் கையேடு

வெளியீடு : விழுது
இல. *03*, ரொரிங்ரன் அவனியு,
கொழும்பு - *07.*
தொ.பேசி : ***011 - 2506272***

அச்சு பதிப்பு : ஈகுவாலிற்றி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
*315,* ஜம்பட்டா வீதி,
கொழும்பு - *13.*
தொ.பேசி : ***011 - 2389848***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

## நாம் வாக்காளர்களா? அல்லது பிரஜைகளா?

இன்று எமது நாட்டில் நாம் காணும் துறைகளிலெல்லாம் ஒரு தேக்கம் நிலவுவதைக் காணலாம். இதை ஆராய்ந்து பார்த்தால் எங்களைச் சுற்றியுள்ள அரசியல் கலாசாரம் இழிவடைந்ததே இந்தத் தேக்கத்திற்கான முழுமுதற் காரணம் என நாம் தெளிந்து கொள்ளலாம்.

அரச திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் எங்கு பார்த்தாலும் அரசியல் தலையீடுகள்; அரசியலிலும் அரச நிர்வாகத்திலும் ஊழல் மலிந்தமை; இந்த நாட்டின் அரசுக்கும் அதன் சிறுபான்மை இனத்தவர் களுக்கும் இடையில் நேர்ந்த முரண்பாட்டினைத் தர்க்க ரீதியில் தீர்க்க இயலாமையினால் அந்நிலை உள்நாட்டு யுத்தத்துக்கும் அழிவுக்கும் இட்டுச் சென்றமை; இந்த யுத்தத்தினால் சொத்துக்களும் உயிர்களும் அழிந்தது மட்டுமல்லாமல், சமூகம் இராணுவமயமாக்கப்பட்டு, வெளிநாட்டு முதலீடுகள் அருகி, புத்தி ஜீவிகள் பெருமளவில் புலம் பெயர்ந்து, பொருளாதாரப் பேரிழப்புக்களை நாடு சந்திக்க நேர்ந்தமை; என்று இவ்வாறாக இந்தத் தேக்கத்தின் காரணிகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். என்ன காரணிகளை நாம் காட்டினாலும் அவையெல்லாமே இறுதியில் தவறான அரசியல் பாதை என்கின்ற புள்ளியிலேயே போய் முடிவடைகின்றன. இதைப் பற்றிப் பேசப் போனால், எங்கள் நாட்டு அரசியல்வாதிகள் எப்போதும் இப்படித்தான் என்று நாம் பெருமூச்சு விடுவதையே வழக்கமாகக் கொள் கின்றோம்.

எந்த நாடு என்றாலும் அரசியல்வாதிகள் ஒன்றுதான். எங்கள் நாட்டு அரசியல்வாதிகள் மட்டும்தான் ஏதோ மிதமிஞ்சிய வில்லத்தனத்தில் பெயர் போனவர்கள் அல்லர். அப்படியானால் ஏன் எங்களுக்கு மட்டும் ஏன் இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி ஏற்பட்டது? ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிட்டால் ஏன் எங்கள் நாட்டு அரசியல்வாதிகள் மட்டும் அளவற்ற அதிகாரங்களுடன் தங்கள் நலன்களை மட்டும் கவனிக்கும் அப்பட்டமான கேடித்தனத்துடன் உலவுகின்றனர்?

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் தலைவர்களைப் பொது மக்கள் தமது செயல்களுக்காகக் கணக்குக் காட்ட வைக்கும்போதுதான் அவர்களின் அதிகாரத்திற்கு அணை கட்டப்படுகின்றது. நாட்டின் சுபீட்சத்தைப் பாதிக்கும் முக்கிய விடயங்களை, வெறுமனே கைவிரலில் விட்டு எண்ணக்கூடிய அரசியல் தலைவர்களினதும் அவர்களது நெருங்கிய ஆலோசகர்களினதும் கைகளில் விடாது பொது மக்களும் அத்தீர்மானங்களில் பங்கெடுக்கும்போதுதான் அத்தலைவர்கள் தங்கள் சொந்த நலன்களை மட்டும் பாதுகாத்துக் கொண்டிராமல் பரந்து பட்ட மக்களின் நலன்களையும் தங்கள் கருத்தில் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதற்கேற்ப எமது நாட்டின் கொள்கைத் திட்டங்களையும் சட்டங்களையும் வகுக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். அதிகாரத்திலுள்ளவர்களுக்கு இயற்கையாகவே இருக்கக்கூடிய வில்லத்தனத்துக்கு கடிவாளம் இடப்படுகின்றது. இதன் பயனாக மலரும் ஒரு புதிய அரசியல் பண்பாட்டினால் புதியதொரு அரசியல் சந்ததியும் உருவாகின்றது. உலகம் இவ்விதத்தில்தான் முன்னேற முடியும்.

எதனை அடைய வேண்டுமானாலும் அதற்காக நாம் ஏதோவொன்றைக் கொடுத்தேயாக வேண்டுமல்லவா? இலவசமாக எமக்குக் கிடைக்கும் நன்மைதான் எது? இதனை மனதில் கொண்டுதான் "எந்நேரமும் விழிப்பாக இருப்பதே ஜனநாயகத்துக்காக நாம் கொடுக்கும் விலையாகும்" என்று ஒரு அறிஞர் கூறிச் சென்றார். ஆம், நாம் சும்மா இருந்து பார்த்துக் கொண்டிருந்தால் ஜனநாயகத்தை உருவாக்க முடியாது. ஜனநாயகம் என்பது ஒரு முடிவுப் புள்ளி அல்ல. அது தொடர்ந்து தொடர்ந்து முன்னேற்றப்படக்கூடிய ஒரு முடிவிலியாகும். அதற்காக நாம் தொடர்ந்து விழிப்பாகக் கண்காணித்துக் கொண்டும் அதனை வளர்த்துக் கொண்டும் இருக்கும் கடமையைச் செய்தேயாக வேண்டும்.

எங்கள் நாட்டிலோ ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் இந்த விடயம் தலைகீழாகத்தான் நடைபெறுகின்றது. அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடவடிக்கைகளில் மட்டும் நாம் முழுவனே பங்கு கொள்கின்றோம். ஆனால் தொடர்ந்து அவர்கள் பதவிக்காலத்தில் செய்யும் தில்லுமுல்லுகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சரி, அடுத்த தேர்தலிலாவது இந்தத் தவறுகளின் அடிப்படையில் வாக்குகளை அளிக்கின்றோமா என்றால் அதுவும் இல்லை. அனேகமாக குடும்ப விசுவாசங்களின் அடிப்படையிலும், குறிப்பிட்ட அரசியல்வாதி எமக்கு தனிப்பட்ட ரீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த உதவியின் அடிப்படையிலும், கவர்ச்சியான வாக்குறுதிகளின் அடிப்படையிலும் அல்லவா நாம் எமது வாக்குகளைக் கொடுக்கத் தலைப் படுகின்றோம்?

சுருங்கக்கூறில், நாம் வெறுமனே வாக்காளர்களாகத்தான் இருக்கின் றோமேயொழிய சமூகப்பொறுப்பு வாய்ந்த பிரஜைகளாக அல்ல. இதிலும்விட நாம் வாக்காளர்களாக இல்லாமலே இருந்திருக்கலாம்.

## பிரஜைகளை உருவாக்குதல்

பிரஜைகள் என்பவர்கள் தங்களுடைய நாட்டில் தமக்கு இருக்கக்கூடிய உரிமைகளை அனுபவிப்பதுடன் அதனுடன் தொடர்புபட்ட தமது பொறுப்புக் களையும் சுமப்பவர்களாவர்.

நாம் உண்மையான பிரஜைகளாக இருக்க வேண்டுமானால் பின்வரும் மூன்று பொறுப்புக்களையும் சுமக்க வேண்டும்:

1) எங்களைச் சுற்றிய நடப்புக்களில் எம்மைப் பாதிக்கும் விடயங் களைப் பற்றிய சரியான தகவல்கள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

2) அந்தத் தகவல்களைக் கொண்டு, எமக்கும் எமது சமூகத்தில் வாழும் ஏனையோருக்கும் பொதுவாக நன்மை கொடுக்கக் கூடிய உகந்த கொள்கைத் திட்டங்களையும் நடைமுறைகளையும் கலந்துரையாடி தெளிபவர்களாக இருக்க வேண்டும்.

3) நாம் பொதுவில் கலந்துரையாடி தெளிந்த கொள்கைத் திட்டங் களும் நடைமுறைகளும் செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக் கைகளில் இறங்க வேண்டும்.

மேற்கூறிய மூன்று தகுதிகளையும் கொண்ட உண்மையான பிரஜை களை உருவாக்குவதற்கென்றே வாசகர் செயல் வட்டங்கள் அமைக்கும் திட்டத்தினை விழுது நிறுவனம் அறிமுகம் செய்கின்றது. வாசகர் செயல் வட்டங்கள் ஒரு குறித்த விடயத்தினைப் பற்றிய தகவல்களை அதன் அங்கத்தவர்கள் பெறுவதற்கு உதவுவன. அத்துடன், அவ்விடயத்தினை ஒரு உகந்த தீர்விற்குக் கொண்டுவரும் கொள்கைத் திட்டத்தினைக் கலந்துரை யாடிப் பெற்று, அதனை நடைமுறைப்படுத்துவதற்கென அவர்கள் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்துவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கையேடும் அதன் நோக்கங்களும்

இம்மாதிரியான வாசகர் செயல் வட்டங்கள் சிறப்புற இயங்குவதற்கு இன்றியமையாத பங்கு வகிப்பவர்கள் அவற்றின் இலகுபடுத்துனர்களாகும். வாசகர் வட்டங்களின் இலகுபடுத்துனர்கள் தங்கள் செயற்பாடுகளை சிறப்புற முன்னெடுக்க உதவுவதற்கென்றே இக்கையேடு வெளிக்கொணரப்படுகிறது. ஏற்கனவே கிரமமாக இயங்கும் வாசகர் வட்டங்களில் ஊக்கமாகச் செயற்படும் அங்கத்தவர்களைத் திரட்டி அவர்களுக்கு சிறு பயிற்சியொன்றினை அளித்த தன் பின்னர் அவர்கள் தொடர்ந்து இயங்குவதற்கு ஏதுவாக அவர்களுக்கு ஒரு துணையாக இது உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது.

இக்கையேட்டின் முதல் பாகத்தில் வாசகர் செயல் வட்டங்கள் என்றால் என்ன என்பதும் பரந்த மட்டங்களில் ஏராளமான வட்டங்கள் அமைக்க வேண்டியதன் தேவையும் விளக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த பாகத்தில் இலகுபடுத்துனரின் கடமைகளும் அவருக்கு இருக்க வேண்டிய குணாதிசயங் களும் கூறப்பட்டிருக்கின்றன. மூன்றாவது பாகத்தில் வாசகர் செயல் வட்டங் களை உருவாக்கும் முறைகள் சில விவரிக்கப்பட்டுள்ளன.

பயிற்சியொன்றும் இல்லாமலும்கூட வாசகர் செயல் வட்டங்களை உருவாக்கி அவற்றிற்கு நல்ல இலகுபடுத்துனராக இயங்கக்கூடிய முறையில் நாம் சகல வழிமுறைகளையும் இக்கையேட்டில் உள்ளடக்கியிருக்கிறோம். இதைக்கொண்டு நீங்களும் பயன்பெற்று உங்கள் மூலம் சமூகமும் பயன்பெறவேண்டுமென்று விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 1

## வாசகர் செயல் வட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் செயல் வட்டங்கள் என்றால் என்ன?

ஜனநாயகம் என்றால் மக்கள், மக்களுக்காக, மக்களைக் கொண்டு அமைக்கும் ஆட்சி என்பர். இதன் அடிப்படையிலேயே சமகாலத்தில் நாம் பார்க்கக்கூடிய பாராளுமன்றப் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை ஏற்படுத் தப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக பாராளுமன்றப் பிரதிநிதித்துவ ஆட்சி முறையை மனிதகுல வரலாறு பார்த்திருக்கின்றது. மக்கள் ஆட்சி என்பது நடைமுறையில் நிகழ்வது கிடையாது என்பதே இந்த வரலாறு எமக்குக் கற்றுத் தந்த பாடமாகும். எங்கும் அதிகாரவலுவும், ஆயுதபலமும், பணபலமும் கொண்ட ஒரு சிறிய குழுவினரே தம்மை மக்கள் தெரிந்தெடுக்க வைத்து அவர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்கின்றனர். ஒரு நாட்டின் கொள்கைத் திட்டங்களும் சட்டங்களும் இச்சிறிய குழுவினரின் நலன்களை யொட்டியே தீர்மானிக்கப்படுகின்றன. ஏனைய ஆயிரக்கணக்கான மக்களோ இந்த விடயங்களைப் பற்றியும் பிரச்சனைகளைப் பற்றியும் அதிகம் தெரியாதவர்களாக, வலுவிழந்தவர்களாக இயங்குகின்றனர். உண்மையில் அவர்களின் அறியாமையே ஆட்சியாளர்கள் கொண்டுள்ள அதிகாரவலுவாக உருமாறுகின்றது.

இந்த நிலைமையை மாற்றி உண்மையான மக்கள் ஆட்சியினை உருவாக்க வேண்டும், அது சாத்தியமானதே என நினைப்பவர்களினால் வாசகர் செயல் வட்டங்கள் உருவாக்கப்பட்டன. மக்கள் ஒரு விடயத்தைப் பற்றிய அறிவைப் பெறுவதொன்றே அதைப் பற்றிய அவர்களின் அதிகார வலுவினை நிலைநாட்டும் நடவடிக்கையாகும் என்கின்ற கோட்பாட்டை அடியொற்றியே இவை உருவாக்கப்பட்டன. ஜனநாயக முறைமைகள் தோன்றிய காலந்தொட்டே, அதாவது 19ம் நூற்றாண்டு தொடங்கியே வாசகர் செயல் வட்டங்களும் உலகத்தில் ஆங்காங்கே செயற்பட்டு வந்திருக்கின்றன. வாசகர் வட்டங்களானவை வளர்ந்தோர் தாம் ஒரு விடயத்தைப் பற்றிக் கற்றுக் கொள்ளவும், அதைக் கற்றுக் கொண்டதனால் அதையொட்டிய கொள்கைத் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் நடைமுறைகள் பற்றிய நிலைப்பாடுகளை எடுத்து மாற்றத்திற்கான அழுத்தங்கள் கொடுக்கவும் வழி வகுக்கும் ஒரு இலகு முறையாகும். இங்குதான் மக்கள் சட்ட திட்டங்களைத் தாம் உருவாக்குபவர்களாக, அதாவது தாமே ஆட்சியாளர்களாக, மாறுகின்ற னர். சுருங்கக்கூறில், சமூக மாற்றத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றனர். மக்கள் மக்களுக்காக மக்களைக் கொண்டு அமைக்கும் ஆட்சி ஏற்படு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் செயல் வட்டங்கள் என்பன ஒரு சமூகம் கூட்டாக தனது பிரச்சனைகளைத் தீர்க்க விழையும் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாகும். இவ்வட்டங்களில் கலந்து கொள்பவர்கள் தாம் அக்கறைப்படும் ஒரு விடயத்தைப் பற்றி ஒருவரோடொருவர் முகம் பார்த்து நேருக்கு நேராக கலந்துரையாடுகின்றனர். இங்கு கூட்டுறவும் பங்களிப்பும் கொண்டு அவற்றின் மூலம் அங்கத்தவர்களின் அனுபவங்களையெல்லாம் முழுவனே பயன் படுத்துகின்றனர். இந்தக் கலந்துரையாடல்கள், தமது நாட்டை எதிர் நோக்கியுள்ள சிக்கலான பிரச்சனைகளுக்கு சாதாரண மக்கள் தமது ஆழ்ந்த அனுபவ அறிவைக் கொண்டு தீர்வுகள் தேடும் வாய்ப்புக்களை ஏற்படுத்து கின்றன. பொது விடயங்களைப் பற்றி பொது அரங்குகளில் மக்கள் தங்கள் குரல்களை ஒலிக்கச் செய்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் செயல் வட்டங்களாவன..............

- தன்னார்வமும் சகலருடைய முழுப் பங்களிப்பும் கொண்ட குழுக் கள் ஒரு விடயத்தைக் கலந்துரையாடி ஆராய மேற்கொள்ளும் முறைவழியாகும்
- வழக்கமாக 8 – 12 அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய குழுக்களா கும்
- அங்கத்தவர்கள் ஆண்களாகவும், பெண்களாகவும், பல்துறை களைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும்
- கலந்துரையாடல்களை நெறிப்படுத்துபவராகவும் நடுநிலையான வராகவும் இருக்கும் ஒரு இலகுபடுத்துனரின் தலைமையில் இவை செயற்படும். இலகுபடுத்துனராக இயங்குபவர், எடுக்கப்படும் விடயங்களில் நிபுணத்துவம் உள்ளவரோ அல்லது ஏனை யோருக்குக் கற்றுக் கொடுப்பவரோ அல்ல.
- தாம் தமக்குள் ஒருவரையொருவர் மதித்து ஆக்கபூர்வமாகக் கலந்துரையாடுவதற்கென அடிப்படை விதிகள் அமைத்துக் கொள்வன
- ஒரு குறித்த நிலைப்பாட்டினை ஒவ்வொருவரும் எடுக்கும் விவாதங்களாக இல்லாமல், எல்லோரும் பங்குபற்றும் கலந்துரை யாடல்களிலும் அதையொட்டிய ஆராய்ச்சியிலும் தம்மை ஈடுபடுத்துவன.
- கலந்துரையாடப்படும் விடயத்தைப் பற்றிய ஒரு கண்ணோட் டத்தை அல்லது ஒரு கோணத்தை மட்டும் எடுக்காமல் பல்வேறு கண்ணோட்டங்களையும் கோணங்களையும் எடுத்து அலசுவன
- பல தடவைகள் தமக்குள் சந்திப்பன, அங்கத்தவர்கள் ஒவ்வொரு வரும் குறித்த விடயத்தையொட்டிய தமது சொந்த அனுபவங் களைப் பகிர்ந்து கொள்வதிலிருந்து அதைப் பற்றிய மற்றவர் களுடைய கருத்துக்களையும், வேறு நிபுணர்கள் தெரிவிக்கக்கூடிய கருத்துக்களையும் பற்றி அறிவது வரை அதற்கான வாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுப்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவை இயங்குவதற்கு எல்லோரும் ஒத்திசையத் தேவையில்லை. ஆயினும், எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் கருத்துக்களையும் தாம் வேறுபடும் கருத்துக்களையும் வெளிக்கொணருவன.
- குறித்த விடயத்தைப் பற்றிய நடவடிக்கைகளுக்கு அங்கத்தவர் களை இட்டுச் செல்லும். பங்குபற்றுகின்ற பிரஜைகள் யாவரும் தங்கள் சமூகத்தினை முன்னேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும் வாய்ப்புக்களை வழங்குகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்கள்

**நா**ம் முன்னர் வாசகர் செயல் வட்டங்கள் சமூக மாற்றத்திற்காக மக்கள் இயங்கும் பொறிமுறையாகும் என விவரித்தோம். சமூக மாற்றங்கள் தேவையெனில், ஓரிரு வாசகர் வட்டங்கள் கொண்டு இதனைச் செயற்படுத்த முடியாது என்பது புரியும். அதற்கு சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்கள் நமக்குத் தேவை. ஆயிரக்கணக்கான வாசகர் செயல் வட்டங்கள் கூடி ஒரு விடயம் பற்றி ஆராயும்போது அதில் ஒரு பயனுறுதி மிக்க விளைவினை அவை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றன.

சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்களை அனேகமாக ஏதாவதொரு அமைப்புத்தான் ஆரம்பித்து வைக்கின்றது. இது அரசாங்கத் திணைக்கள மாகவோ, உள்ளூராட்சி அமைப்புக்களாகவோ, அரசுசாரா நிறுவனங்களா கவோ, குறிப்பிட்ட ஆணைக்குழுக்களாகவோ அல்லது வர்த்தக நிறுவனங் களாகவோ கூட இருக்கலாம். சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்களின் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்க முன்வரும் அமைப்பு, தானும் தன்னையொத்த ஏனைய அமைப்புக்களும் அக்கறைப்படும் ஒரு பொது விடயத்தை வாசகர் வட்டங்களின் கலந்துரையாடல் விடயமாக முன்வைக் கின்றது. எடுக்கப்படும் விடயத்தில் தங்களுடைய நலன்களையும் கொண் டுள்ள ஏனைய அமைப்புக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு ஒரு கூட்டமைப்பினை உருவாக்குகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, கல்விக் கொள்கை பற்றிய வாசகர் செயல் வட்டங்கள் உரு வாக்க வேண்டுமானால், இதில் கல்வித் திணைக்களம், ஆசிரியர் தொழிற் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கல்வி அபிவிருத்தியில் ஈடுபடும் அரசு சாரா நிறுவனங்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், தனியார் கல்வி நிலைய நடத்துனர்கள் என எடுத்த விடயத்தில் அக்கறை கொண்ட பல அமைப்புக்கள் ஒரு கூட்டமைப்பாக தம்மை உருமாற்றிக் கொள்ளலாம்.

**சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்கள்**
**எடுக்கக்கூடிய விடயங்களுக்கான சில உதாரணங்கள்**

கல்வித் திணைக்களம் அறிமுகப்படுத்த இருக்கும் புதிய கல்விக் கொள்கை பற்றிய மக்களின் அபிப்பிராயங்களை எடுக்க வேண்டிய தேவை,

நகரங்களிலும் பட்டினங்களிலும் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்,

ஒன்றாக வாழும் வெவ்வேறு இனங்களுக்கு மத்தியில் இருக்கக் கூடிய முறுகல் நிலைகளும் அவற்றைத் தீர்ப்பதற்கான உபாயங்களும்,

கழிவகற்றுதல், சூழல் பாதுகாப்பிற்கு உள்ளூராட்சித் திணைக் களங்களும் சமூகக் குழுக்களும் செய்யவேண்டிய நடவடிக் கைகள்,

வேலைத்தலங்களில் பாலியல் தொந்தரவுகளை எவ்வாறு முற்றாக இல்லாதொழிக்கலாம்?,

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒற்றையாட்சி, சமஷ்டி, கூட் டாட்சி, தனி நாடு இவையெல்லாவற்றிலும் எது ஒரு பொருத்தமான தீர்வாகும்?,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு அமைப்பும் தனது அங்கத்தவர்கள் மத்தியில் வாசகர் செயல் வட்டங்களை ஆரம்பிக் கின்றது. இச்செயல் வட்டங்களுக்கான வழிகாட்டி ஒரு சிறிய நூலாக தலைமை வகிக்கும் அமைப்பினால், அல்லது அங்கத்துவம் வகிக்கும் பல அமைப்புக் களினால் வெளியிடப்படும். இந்த வழிகாட்டிகளில், எடுக்கப்படும் விடயத்தைப் பற்றிய சகல மாறுபட்ட கோணங்களும் அபிப்பிராயங்களும் தரப்பட்டு அவை ஒவ்வொன்றினதும் சாத பாதக அம்சங்களும் விவரிக்கப்பட்டிருக்கும்.

ஒரு விடயத்தைப் பற்றி ஆராயும் சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்கள் ஒவ்வொன்றும், அவ்விடயத்தைப் பற்றிய வெவ்வேறு நோக்கைக் கொண்டவர்கள் கலந்த குழுவாக இருப்பது மிக நன்று. அவ்வாறெனில்தான் சம்பந்தப்பட்ட சகலரினதும் பிரச்சினைகள் அங்கு அவ்வட்டத்தில் முன்வைக்கப்படலாம். உதாரணமாக தனியார் கல்வி நிலையங்களைப் பற்றி ஆராயும் வாசகர் செயல் வட்டம் ஒன்று தனியே தனியார் கல்வி நிலைய நடத்துனர்களை மட்டும் கொண்டதாக இருப்பின் அக்குழுவின் முடிவு எப்படி இருக்கும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். அதை விட்டு அக்குழுவில் தனியார் கல்வி நிலைய நடத்துனர்கள், ஆசிரியர்கள், ஓரிரு பெற்றோர்கள், கல்விமான்கள் ஆகியோர் இருக்க முடியுமானால் அங்கு பெறப்படும் முடிவுகள் சகலருடைய அனுபவத்தினதும் அறிவினதும் பரிமாணங்களைக் கொண்டதாக இருக்கும். இதே போல, எடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்தை யொட்டியும், அதைக் கலந்துரையாடும் வாசகர் வட்டங்களின் அங்கத்துவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்து வடிவமைப்பது நன்று.

சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்களின் நடவடிக்கை சாதாரணமாக ஒரு பொதுக்கூட்டத்துடன் ஆரம்பிக்கும். இந்தக் கூட்டத்திற்கு கூட்ட மைப்பின் அங்கத்துவ அமைப்புக்களும் அவற்றின் அங்கத்துவ தொகுதி களும் வருகை தந்திருக்கும். வெகுஜன ஊடகங்களும் இதில் பெருமளவு ஈடுபடுத்தப்படும். கூட்டத்தில், எடுக்கப்படும் விடயத்தின் முக்கியத்துவம் விளங்கப்படுத்தப்படும். வாசகர் செயல் வட்டங்களின் இலகுபடுத்துனர்கள் பயிற்றப்படவும், வாசகர் செயல் வட்டங்கள் உருவாக்கப்படவும், அவை எடுக்கப்பட்ட விடயத்தைக் கலந்துரையாடி முடிவுகளைப் பெறவும் தரப்படுகின்ற காலப் பிரமாணமும் விவரிக்கப்படும். வாசகர் செயல் வட்டங் கள் உபயோகிக்கவிருக்கும் வழிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்படும். இதன் பின்னர் ஒவ்வொரு அமைப்பும் தத்தமது இடங்களுக்குத் திரும்பி வாசகர் செயல் வட்டங்களை உருவாக்கி செயற்பட வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விடயத்தையொட்டிய கலந்துரையாடற் குழுக்கள் சாதாரணமாக இரண்டு மாதக் காலத்திற்கு தமக்குள் 8 - 10 தடவைகள் சந்தித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு சந்திப்பும் இரண்டு இரண்டரை மணித்தியாலங்கள் எடுக்கலாம். இந்த சந்திப்புக்களின் முடிவில் தமது அபிப்பிராயங்களையும் பொது முடிவுகளையும் ஒரு சிறிய அறிக்கையாக வெளிவிடுகின்றன. இந்த அறிக்கைகள் எல்லாம் தொகுக்கப்பட்டு இறுதியில் இன்னுமொரு பொதுக்கூட்டத்தில் வெளிவிடப்படுகின்றன. ஊடகங்களில் அலசப்படுகின்றன. அரசியல்வாதிகளுக்கு விண்ணப்பங்களாக அனுப்பப்படுகின்றன. புத்தி ஜீவிகளும் கொள்கைத் திட்ட உருவாக்கவிலாளர்களும் இவற்றை ஆராய் கின்றனர். சகலரும் வாசகர் செயல் வட்டங்கள் இது தொடர்பாக என்ன செய்தன என்பது பற்றி அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் செயலணிகளை உருவாக்கி, செயற்பாட்டுத் திட்டங்களை இடவும் செயற்படுத்தவும் ஊக்குவிக்கின்றது. இந்த நடைமுறைகள் எல்லாமே பொதுவில் ஒரு அபிப்பிராய மாற்றத்திற்கு இட்டுச் செல்லுகின்றன.

சாதாரணமாக, ஒரு பிரச்சனை அல்லது விடயம் எத்தனை பேரைப் பாதிக்கின்றதோ அத்தனை பேரினதும் பத்து சதவிகிதமானோராவது வாசகர் செயல் வட்டங்களில் ஈடுபட்டால்தான் நிறைந்த பலனை நாம் பெறமுடியும். உதாரணமாக, 500 பேர் வாழும் ஒரு கிராமத்தைப் பொறுத்த வரையில் அதன் பிரச்சினைகளை அதில் வசிக்கின்ற ஓர் 50 பேர் கூடி விவாதிப்ப தாலேயே மாற்றங்களைக் கொண்டு வரலாம். கல்விக் கொள்கை பற்றிய தானால் ஒரு 5000 ஆசிரியர்களும் பெற்றாரும் கூடி மாற்றங்களைக் கொண்டு வரலாம். ஆனால் இதுவே இலங்கை நாட்டைப் பாதிக்கின்ற பிரச்சினை யென்றால், கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் மக்களாவது இந்த முறைவழியில் ஈடுபட்டால்தான் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரலாம்.

## சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்களாவன...................

- மத நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், வெகுஜன ஊடகங்கள், உள்ளூராட்சி அமைப்புக்கள், அரச திணைக்களங்கள், காவல் துறை போன் றவை இணைந்த ஒரு கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான எண்ணிக்கைகளில் செயற்படும்
- ஒழுங்கமைப்பதற்கு சாதாரணமாக 3 - 6 மாதங்கள் எடுக்கும்
- பாதிக்கப்படும் சமூகத்தின் 5 - 10 சதவிகிதிமானோரை ஈடுபடுத்தும்

ஒரு அறிமுகப் பொதுக் கூட்டத்துடன் ஆரம்பித்து செயற்பாட்டுக்கான செயலணி அல்லது செயலணிகள் உருவாக்கப்படுவதுடன் முடிவடையும்

## சமூகம் பரந்த வாசகர் செயல் வட்டங்களின் விளைவுகள்

- ஒரு பொதுப் பிரச்சினையை ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய சொந்தப் பிரச்சினை என உணர வைக்கின்றது.
- ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய சொந்த அனுபவங்களுக்கும் பொதுக் கொள்கைத் திட்டங்களுக்கும் இடையில் நிலவும் நெருங்கிய தொடர்புகளை உணர வைக்கின்றது.
- தனக்கு ஒரு விடயத்தைப் பற்றி இருக்கின்ற அக்கறை போலவே மற்றவர்களுக்கு இன்னொரு கோணத்தில் இருக்க முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர வைக்கின்றது; ஒவ்வொருவருக்கும் அவர்களின் சொந்த நலன்களை யொட்டிய ஒவ்வொரு கண்ணோட்டம் உண்டு என்பதை விளங்க வைக்கின்றது.
- ஒவ்வொருவரும் தமக்குள் இருக்கக்கூடிய பொது அபிப் பிராயங்களை அறிந்து ஒருவரோடொருவர் இணைந்து இயங்க ஊக்குவிக்கின்றது, சமூக வலையமைப்புக்களை விருத்தி செய்கின்றது.
- அரசு நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் இடையேயான தொடர்புகளையும் தொடர்பாடல்களையும் தனிப்பட்ட ரீதியிலும், நிறுவன ரீதியிலும் ஊக்குவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மாதிரி வாசகர் செயல் வட்டத்தின் தொடர் சந்திப்புக்களின் நிகழ்ச்சி நிரல்

(ஒவ்வொரு பாகமும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சந்திப்புக்களின் போது கையாளப்படலாம்)

**முதல் பாகம்:** எடுக்கப்பட்ட விடயம் என்னை தனிப்பட்ட ரீதியில் எவ்வாறு பாதிக்கின்றது? (ஒவ்வொருவரும் தமது சொந்த உணர்வுகளைப் பற்றியும் அனுபவங்கள் பற்றியும் கலந்துரையாடுவார்கள்)

**இரண்டாம் பாகம்:** பிரச்சினையின் தன்மை என்ன? (பலதரப்பட்ட கண்ணோட்டங்களும் இதில் அலசப்படும்)

**மூன்றாம் பாகம்:** இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கையாளக்கூடிய அணுகுமுறைகள் யாவை? (பலதரப்பட்ட தீர்வுகளும் அலசப்படும்)

**நான்காம் பாகம்:** எங்கள் எங்கள் சமூகத்தில் இந்தத் தீர்வுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றோம்? (செயற்பாட்டை நோக்கி நகர்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 2

## வாசகர் செயல் வட்டங்களின் இலகுபடுத்துனர்கள் செயற்படும் முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுபடுத்துனர்களுக்கான யுக்திகள் சில



## தயாராக இருத்தல்!

ஒரு வாசகர் செயல் வட்டத்தின் இலகுபடுத்துனராக இருப்பதற்கு நீங்கள் கலந்துரையாடப்படும் விடயத்தின் நிபுணராக இருக்கவேண்டும் என்பதல்ல. எந்தக் கலந்துரையாடலையும் நெறிப்படுத்துவதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது.

அப்படியானால் நீங்கள்,

- குறித்த வாசகர் செயல் வட்டத்தின் இலக்குகளைப் புரிந்து கொண்டவராக இருக்க வேண்டும்
- கலந்துரையாடலுக்காக தயாரிக்கப்பட்டிருக்கும் வழிகாட்டியினை முதலிலேயே வாசித்து விளங்கிக் கொண்டிருக்க வேண்டும்.
- அந்த நாள் கலந்துரையாடல் எப்படி போகக் கூடும் என்பதைப் பற்றி யோசித்து வைத்திருக்கவேண்டும்.
- பங்குபற்றுனர்கள் தரப்பட்ட விடயத்தைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும் கேள்விகளைத் தயாரித்து வைக்க வேண்டும்.

## நடுநிலையாக இருத்தல்!

நீங்கள் இலகுபடுத்துனர்களாக பாத்திரம் வகிக்கும்பொழுது உங்களுடைய சொந்த நோக்கங்களை அங்கு திணிக்கலாகாது. ஒரு கலந்துரையாடல் சிறந்த முறையில் செல்லுவதை உறுதிப்படுத்த நீங்கள் இருக்கின்றீர்களே தவிர அதில் கலந்து கொள்ளுவதற்கல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகஜமான சூழ்நிலையை உருவாக்குதல்

எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று ஒரு நட்புறவான சூழலினை உருவாக்குங்கள். நல்ல நகைச்சுவையுடன் கலந்து உங்கள் அறிமுகங்களை மேற்கொள்ளுங்கள்.

குறித்த வாசகர் செயல் வட்டத்தின் நோக்கங்களை விளக்குங்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டான முறையில் ஒரு பிரச்சினையை ஆராய்வதே இதன் நோக்கம் என்பதை நினைவுபடுத்துங்கள். நீங்கள் இந்த விடயத்தில் நிபுணர் அல்லவெனவும், எந்தப் பக்கத்தையும் சார்ந்தவரல்லவெனவும் தெளிவுபடுத்துங்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து குழு கலந்துரையாடலுக்கான விதிகளை உருவாக்க உதவுங்கள்.

### குழுக் கலந்துரையாடலுக்கான அடிப்படை விதிகள்

- கவனமாகவும் மரியாதையுடனும் மற்றவர் கூறும் கருத்துக்களைச் செவி மடுத்தல்
- பேசுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்பளித்தல்
- ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே பேச முடியும். ஒருவர் பேசும் போது இடைமறிக்காது இருத்தல்.
- ஒவ்வொருவரும் தங்களுக்காக மட்டும் பேசவேண்டும். தாம் பிரதிநிதித்துவம் செய்யும் ஏதாவது அமைப்பின் சார்பிலோ அல்லது தமது இனத்தின் சார்பிலோ யாரும் பேசாது இருத்தல்.
- மற்றவர் சொல்லும் ஏதும் கருத்து நெஞ்சைப் புண்படுத்தினால் அல்லது தொந்தரவாக இருந்தால் அதைத் தெரிவித்து அதன் காரணத்தையும் தெளிவாக விளக்குதல்
- மற்றவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லையாயினும் அவர்கள் மாறுபட்ட கருத்துக்களை வைத்திருப்பதற்கு உரிமை உள்ளவர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அவர்கள் கருத்திற்கு மரியாதை கொடுத்தல்
- குழு ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இலகுபடுத்துனருக்கு உதவியாக இருத்தல்
- குழுவின் கலந்துரையாடல்களில் கூறப்படும் சில கதைகள் அந்தரங்கமானவையாக இருக்கலாம். குழுவினர் ஒத்துக் கொண்டாலன்றி அவற்றை வெளியில் கூறாதிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழுக் கலந்துரையாடலின் போக்குகளில் அவதானமாக இருத்தல்

பேசப்படும் விடயத்தை விட்டு குழுவினர் நழுவாமல் இருப்பதை நீங்கள் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன், ஒவ்வொருவரும் எவ்வாறு கலந்து கொள்ளுகின்றனர் என்பதில் அவதான மாக இருங்கள். சிலர் நிறையப் பேசக்கூடியவர்கள். சிலர் தமது கருத்துக் களைச் சொல்லத் தயக்கம் காட்டுவார்கள். இதனை உணர்ந்து எல்லோருக்கும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுங்கள்.

கடினமானதும் சிக்கலானதுமான விடயங்கள் பேசப்படின் குழுவினரை மேலும் சிறு குழுக்களாகப் பிரித்து விடலாம். சிறு குழுக்களில் சில நேரம் கூடியளவு மனந்திறந்து இந்த விடயம் தங்களை எவ்வாறு பாதிக்கின்றதென பங்குபற்றுனர்கள் பேச வாய்ப்பாக இருக்கும்.

குழுவினர் பதில் தெரியாத கேள்விகளுக்காக உங்களை நாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் இந்த விடயத்தில் நிபுணர் அல்லவெனவும் எந்தப் பக்கத்தையும் சார்ந்தவரல்லவெனவும் தெளிவாக விளக்கி விடுங்கள்.

குழு அங்கத்தவர்கள் கூறும் ஒவ்வொரு கருத்துக்கும் பின்பு நீங்கள் ஏதேனும் விளக்கவுரை கூறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குழு அங்கத்தவர்களே நேரடியாகத் தங்களுக்குள் பேசிக் கொள்வதை ஊக்குவி யுங்கள். மிகச் சிறிய அளவில் பேசுபவர்கள்தாம் சிறந்த இலகுபடுத்துனர்கள் ஆவார்கள். இவர்கள் எந்த நேரமும் கலந்துரையாடலை எவ்வாறு அடுத்த கட்டத்திற்கு நகர்த்தலாம் என்பதைச் சிந்தித்த வண்ணம் இருப்பார்கள்.

இடையிடையே, கலந்துரையாடலில் கிளம்பிய முக்கிய கருத்துக்களின் சுருக்கத்தினை பங்குபற்றுனர்களைக் கொண்டே கூற வைத்தல் நன்று.

கலந்துரையாடலின் இடையில் பங்குபற்றுனர்கள் மௌனம் சாதித்தால் அந்தரப்படாதீர்கள். சில சமயங்களில் மௌனமாக சிந்திப்பதும் ஒரு கலந்துரையாடலுக்கு மிகவும் வேண்டப்படும் நடவடிக்கையாகும். மௌனத் தின் முடிவில் அவர்கள் புதிய கருத்துக்களுடன் கலந்துரையாடலை அணுக லாம். மௌனம் நீண்ட நேரத்திற்குத் தொடருமாயின் கேட்கப்பட்ட கேள் வியை மீள உருவகித்து மீண்டும் கேளுங்கள்.

குழுக்கலந்துரையாடலின் அடிப்படை விதிகளை தேவையேற்படும் போதெல்லாம் நினைவுபடுத்துங்கள். நேரத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழுவினர் வெவ்வேறு கண்ணோட்டங்களையும் கருத்துக்களையும் பரிசீலிக்க உதவுதல்

குழுக்கலந்துரையாடலுக்காகத் தரப்படும் வழிகாட்டியையொட்டி உங்கள் கேள்விகளையும் கருத்துக்களையும் கூறும்போது அது நீங்கள் நடுநிலையாளராக இயங்க உதவும். வழிகாட்டியில் தரப்பட்ட மாறுபட்ட கண்ணோட்டங்களைத் தவிர வேறு கருத்துக்கள் இருக்கின்றனவா என்று நீங்கள் பங்குபற்றுனரிடமிருந்து அபிப்பிராயங்களைக் கேட்கலாம். பங்குபற்றுனர்கள் தங்களுடைய சிந்தனைகளையும் அதன் போக்குகளையும் தாமே கவனிப்பதற்கே இலகுபடுத்துனராக நீங்கள் உதவிக்கொண்டிருப்பீர்கள். வழிகாட்டியில் தரப்பட்டிருக்கும் சாதக பாதக விடயங்கள் ஒவ்வொன்றையும் பற்றிச் சிந்திக்க அவர்களை வேண்டுங்கள். அவர்கள் உண்மையெனக் கருதுகின்ற விடயங்களுக்குப் பின்னால் தொக்கி நிற்கின்ற விழுமியங்கள் எவை என்று அவர்களைக் கேளுங்கள். சிலநேரங்களில் குழுவினர் ஒரு கருத்திலே அல்லது ஒரு சம்பவத்திலேயே தங்கள் முழுக்கவனத்தைச் செலுத்த முயற்சிப்பார்கள். அதைத் தவிர்த்து சகல பக்கக் கருத்துக்களையும் அவர்கள் சிந்திப்பதற்கு உதவுங்கள். ஈற்றில், பங்குபற்றுனர் தமக்குள் ஒத்திசையும் பொதுக் கருத்துக்களை கண்டு பிடிக்க உதவுங்கள். ஆனால் அதுதான் இது என்று அக்கருத்தை அவர்கள்மீது திணிக்காதீர்கள்.

## சிந்தித்துப் பதிலளிக்க வேண்டிய பொதுப்படையான கேள்விகளைக் கேட்டல்

உடனேயே ஆம் அல்லது இல்லை என்று பதில் கூறக்கூடிய கேள்விகளைக் கேட்காதீர்கள். உண்மையென்று தாம் ஏன் குறிப்பிட்ட விடயங்களைக் கருதுகின்றனர் என பங்குபற்றுனரைச் சிந்திக்க வைக்கும் பொதுப்படையான கேள்விகளைக் கேளுங்கள். இவ்வகையான கேள்விகள் வெவ்வேறு கருத்துக் களுக்கு இடையிலான தொடர்புகளையும் பற்றி அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசமான கலாசாரங்களிலிருந்து வருபவர்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகளை அவதானித்து நடத்தல்

உங்களிலிருந்து வேறுபட்ட கலாசாரப் பின்னணியிலிருந்து வருபவர்களை மிகுந்த நுண்ணுணர்வுடனும், விளக்கத்துடனும் நடத்தப் பழகுங்கள். சில கலாசாரப் பின்னணியிலிருந்து வருபவர்கள் தமது உணர்வுகளை வெளிக்காட்ட மாட்டார்கள். இவர்கள் தொடர்பாடும் விதங்களில் வேறுபாடுகள் உண்டு என்பதை உணருங்கள். ஒவ்வொருவரும் வித்தியாசமான முறைகளில் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளலாம் என்பதை விளக்குங்கள். தற்செயலாக கலந்துரையாடல் வெவ்வேறு கலாசாரங்களைப் பற்றியதாக இருந்தால் ஒவ்வொருவரையும் தங்கள் தங்கள் கலாசாரங்களைப் பற்றி உரையாட ஊக்குவியுங்கள். இதன் மூலம் மற்ற கலாசாரங்களைப் பற்றி இவர்கள் கொண்டுள்ள பொதுமையான தப்பபிப்பிராயங்கள் தெளிவு படுத்தப்பட இடமுண்டு.

### இலகுபடுத்துனர்கள் கலந்துரையாடலின்போது கேட்கக்கூடிய திறந்த கேள்விகள் சில

- இங்கு முக்கிய கருத்து என்ன?
- நீங்கள் அதை ஒத்துக் கொள்கிறீர்களா? ஏன்?
- இந்தக் கருத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கின்றீர்கள்?
- நீங்கள் இப்பொழுது கூறிய கருத்துக்கு எதிரான என்னென்ன வாதங்கள் இருக்கக்கூடும்? அதற்கு ஆதாரமான சம்பவங்கள் ஏதேனும் இருக்கின்றனவா?
- இதைப் பற்றி உங்களுக்கு ஏதும் அனுபவங்கள் இருக்கின்றனவா? அவற்றை ஏனைய குழுவினருடன் பகிர்ந்து கொள்ள உங்களுக்குச் சம்மதமா?
- உங்களுடைய கருத்துக்குப் பின்னால் உள்ள காரணங்கள் எவையென்று நாம் அறிய உதவுவீர்களா?
- இங்கு என்ன நடக்கின்றது என்று நினைக்கின்றீர்கள்? ஏன் அது முக்கியம் எனக் கருதுகிறீர்கள்?
- மற்றவர்கள் இதனை எப்படிப் பார்க்கக்கூடும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குபற்றுனர்கள் தமக்குள் கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருக்கும்போது கேட்க வேண்டிய கேள்விகள் சில

- அவர் என்ன சொல்லுகிறார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- இந்தக் கருத்தில் உங்களுக்கு ஆகத் தொந்தரவாக இருக்கும் விஷயம் என்ன?
- இந்தக் கருத்து வேற்றுமையின் நடுவில் என்ன காரணி இருக்கின்றது?
- இது உங்கள் உணர்வுகளை எவ்வாறு பாதிக்கின்றது?
- நியாய அநியாயம் தெரிந்த ஒரு சாதாரண மனிதர் இந்தக் கருத்தை ஆதரிப்பாரெனில் என்ன காரணி அவரை அப்படிச் செய்யத் தூண்டியது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- இப்படியான கருத்துக்களைக் கொண்டவர்களுக்கு எது முக்கியமாகும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- இந்தக் கலந்துரையாடலை ஒரு தேக்க நிலையில் வைத்திருப்பது என்ன என்று நினைக்கின்றீர்கள்?
- குறைந்த பட்சம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தத்துக்கு நீங்கள் எதை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறீர்கள்?
- எந்த விடயத்தை நீங்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டீர்கள்?
- நீங்கள் ஏற்றுக்கொள்ளும் அந்த விடயத்தைப் பற்றிய எந்தக் காரணி நீங்கள் நம்பக்கூடியதாக இருக்கின்றது?
- நீங்கள் சிந்திப்பதை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?
- இன்னும் நாங்கள் பேச வேண்டிய விடயங்கள் இருக்கின்றனவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடலை முடிவுக்குக் கொண்டுவரும் கேள்விகள்

- நாம் இன்று எதில் ஒத்திசைந்தோம், எந்தக் கருத்தில் வேறுபட்டோம்?
- உங்களுடைய உணர்வுகளை சிறிது விளக்க முடியுமா?
- இன்று நீங்கள் கேட்ட விடயங்களில் உங்களைச் சிந்திக்க வைத்த கருத்துக்கள் எவை? எது உங்கள் நெஞ்சைத் தொட்டது?
- எதையொட்டி உங்கள் எதிர்கால நம்பிக்கைகளையும் எதிர் பார்ப்புக்களையும் கொண்டிருக்கிறீர்கள்?

**ஆகவே. . . . . . . .**

**கலந்துரையாடலை இலகுபடுத்துவதற்கான முக்கிய யுக்திகள் சில இருக்கின்றன. அவையாவன,**

- மீள சிந்தித்தல். "இந்தக் கருத்தைத் திருப்பிப் பார்ப்போமா?" என்று யோசனை கூறுதல்.
- தெளிவாக்குதல். "நான் உங்களைச் சரியாக விளங்கிக் கொண்டிருக்கின்றேனா என்று பார்ப்போம். . . . உங்கள் கருத்து இதுதானா?" என்று கேட்டல்.
- சுருக்கத்தைத் தருதல். "நாங்கள் இதுவரை . . . . . . இவற்றைப் பற்றித்தான் முக்கியமாகப் பேசிக்கொண்டிருந்திருக்கின்றோம் இல்லையா?"
- கவன மையத்தைத் திருப்புதல். "நாங்கள் இதுவரை இதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றோம் இந்தக் கருத்தைப் பற்றி வேறு யாருக்கும் ஏதும் அபிப்பிராயங்கள் இருக்கின்றன வா?" என்று வினவுதல். அல்லது, "நல்லது ராம், இதைப்பற்றி உங்களுக்கும் ஏதும் கருத்துக்கள் இருக்கின்றனவா கமலா?" என்று சகஜமாகக் கேட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மௌனத்தை உபயோகித்தல்
- அங்கங்களின் மூலமும் தொடர்பாடல்
- கண்ணினால் அல்லது கைகளினால் சைகைகள் செய்யலாம். உதாரணமாக கண்ணை அசைத்து சைகை காட்டி பேசுபவர்களை ஊக்குவிக்கலாம் அல்லது நிறையப் பேசுபவர்களை நிறுத்தலாம்.

## ஒவ்வொரு கலந்துரையாடலைப் பற்றியும் குறிப்புக்கள் எடுத்தல்

### குறிப்புக்கள்,

- பேசப்படும் விடயத்தில் பங்குபற்றுனர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தி கலந்துரையாடலை ஒவ்வொரு சந்திப்பிலும் தாம் முன்னோக்கி நகர்த்த உதவுகின்றன
- கலந்துரையாடலின்போது வெளியிடப்படும் முக்கிய அனுபவ அறிவுகளையும் பொதுக் கருத்துக்களையும் ஆவணப்படுத்த உதவுகின்றன
- குறிப்பிட்ட வாசகர் செயல் வட்டங்களின் நடவடிக்கைகளை பொது அறிக்கையாக மாற்றவும் அவற்றைக் கண்காணிக்கவும் உதவுகின்றன

### குறிப்புக்கள் எடுக்கும் விதம்:

- பேசப்படும் எல்லாவற்றையும் எழுதுவதைவிட பேசப்படும் முக்கிய விடயங்களை மட்டும் குறித்துக் கொள்ளுங்கள்
- பேசுபவர்களுடைய வார்த்தைகளை கூடியளவு உபயோகித்து எழுதுங்கள்
- உங்களுடைய குறிப்புக்களை அடிக்கடி குழுவினருடன் சரிபார்த்துக் கொள்ளுங்கள்
- தயவு செய்து எல்லோரும் வாசிக்கக்கூடியதாக நேர்த்தியான கையெழுத்தில் எழுதுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரிக் குறிப்பேடு

எடுக்கப்பட்ட விடயம் / புத்தகம்:


நாம் ஒத்திசையும் கருத்துக்கள்:

நாம் வேறுபடும் கருத்துக்கள்:

தெளிவாக அபிப்பிராயம் சொல்லப்படாத கருத்துக்கள்:

நடவடிக்கைக்கான யுக்திகள்:

நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக எங்கள் சமூகத்தில் காணப்படும் வளங்கள்:






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகவே . . . . . . .

## நல்ல இலகுபடுத்துனர்கள்,

- நடுநிலையானவர்கள், தங்கள் கருத்துக்களை கலந்துரையாடலில் உட்புகுத்த மாட்டார்கள்
- குழுவினர் தாம் கலந்துரையாடுதற்கான விதிகளை உருவாக்க உதவி செய்வார்கள்
- குழுவினர் தாம் எடுத்துக் கொண்ட விடயங்களை ஆராய ஏது வாக, துழாவும் கேள்விகளைக் கேட்பவர்கள்
- பங்குபற்றுனர் தாம் ஒத்திசையும், வேறுபடும் கருத்துக்களைத் தாமே இனம் காண உதவுவார்கள்
- பேசப்படாத புதிய கோணங்களையும் கண்ணோட்டங்களையும் கலந்துரையாடலுக்குள் கொண்டுவரக் கூடியவர்கள்
- எல்லோரும் பங்குபற்றுதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்து பவர்கள்
- கலந்துரையாடலை பாதை விலகாமல் வைத்திருப்பதுடன் பேசப் படும் விடயங்களைத் தெளிவாக்கிக் கொண்டு வருபவர்கள்
- தமது பலங்களையும் பலவீனங்களையும் பக்கச்சார்புத் தன்மை யையும் உணர்ந்து கொண்டவர்கள்
- குழுவினரின் நலன்களைத் தமது நலன்களுக்கு முன்னே இருத்து பவர்கள்
- பல விதமான மனிதர்களையும் பாராட்டி வைத்திருக்கக் கூடிய வர்கள்
- ஜனநாயக நடைமுறைகளின் கொள்கைகளுக்கு விசுவாசமானவர் கள்
- குழுக்களின் முறைவழிகளில் நம்பிக்கையைக் கொண்டவர்கள்; அவை வெளிக்காட்டக்கூடிய பன்முக வேறுபாடுகளில் சுவாரசி யம் காண்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 3

# வாசகர் செயல் வட்டங்களை ஒழுங்கமைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் செயல் வட்டங்களை அமைப்பதற்கான யுக்திகள்

**வா**சகர் செயல் வட்டங்கள் என்பன பொது மக்கள் தாம் பிரஜைகளாக உருமாறுவதற்குத் தேவையான செயற்பாடு என்று நாம் முன்னர் நோக்கினோம். எமது நாட்டுச் சூழலில் சமூக மாற்றத்திற்காக தாம் இயங்க மிக அரிதாகவே மக்கள் முன்வருவார்கள் என்பதனால் நாம் வாசிப்பு வட்டங்களை முதலில் ஆரம்பித்து பின்னர் இவற்றை வாசிப்பு செயல் வட்டங்களாக மாற்றுதல் இலகுவான முறையாகும். வாசிப்பு வட்டங்கள் உருவாவதனால் மக்கள் மத்தியில் அறிவு விருத்தியும் சமூக ஒன்றிணைப்புக்களும் ஏற்படுகின்றன. அவற்றினால் இரட்டிப்பு நன்மைகள் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள். அத்துடன், வாசகர் செயல் வட்டங்களைப் போலல்லாது வாசிப்பு வட்டங்கள் தொடர்ந்து நிலைக்கக்கூடியன. இவற்றை நாம் வேண்டியபோதெல்லாம் வாசகர் செயல் வட்டங்களாகவும் செயற்படவைக்கும் வாய்ப்புக்கள் நிறைய உண்டு. இங்கும் இரு மடங்கு நன்மைகளைக் காண்கிறோம்.

எந்த வாசகர் வட்டத்துடனும் ஆரம்பத்தில் கடுமையாக உழைக்க வேண்டும். ஆரம்பக் கூட்டங்களை நீங்கள்தான் ஒழுங்கு செய்ய வேண்டி வரலாம். தொடர்ந்து நாலைந்து கூட்டங்களுக்கு நீங்கள் இருந்தே தீரவேண்டும். அவர்களுக்கு ருசி பிடிபட்டால் பின்பு தாங்களே கூட்டங்களை ஏற்பாடு செய்ய முன்வருவார்கள்.

## வாசிப்பு வட்டங்களை உருவாக்குவதற்கான யுக்திகள்:

### 1. ஆசிரியர்கள் மட்டத்தில்.........

விழுது அமைப்பு ஆசிரியர்களுக்கென அகவிழி என்கின்ற மாதாந்த சஞ்சிகையை வெளிவிடுகின்றது. அத்துடன், ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்குமான கருத்தரங்குகளையும் கிரமமாக நடத்துகின்றது. அகவிழி கைவசம் கிடைக்கக்கூடியதும், ஆசிரியர்கள் அக்கறை கொண்டுள்ள பல விடயங்களைப் பற்றிய ஆழமான ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொண்டு வரும் சஞ்சிகையாகவும் இருப்பதால் ஆசிரியர்கள் மத்தியில் அகவிழி சஞ்சிகையின் வாசிப்பு வட்டங்களை ஏற்படுத்துவது இலகுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு, விழுது அமைப்பிலிருந்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக் கான கருத்தரங்குகளில் பங்குபற்றியிருப்பவர்களின் பெயர்ப் பட்டியல்களை எடுங்கள். இவர்களை சிறு சிறு குழுக்களாக அழைத்து அகவிழி வாசகர் வட்டங்கள் அமைக்கவேண்டியதன் தேவைகளையும் அவை இயங்க வேண்டிய முறைமைகளையும் கலந்துரையாடுங்கள். அகவிழி வாசகர் வட்டங்களை அமைக்க ஆர்வம் தெரிவிப்போரைக் குழுவாக்குங்கள். பொது விடயங்களை வாசிப்பதாயும் இக்குழுக்களை நீங்கள் அமைக்கலாம்.

## 2. பாடசாலை மாணவர்கள் மட்டத்தில்..........

பாடசாலைகளின் அதிபர்களுடன் கலந்துரையாடி பாடசாலை கூட்டம் (அசெம்பிளி) நடக்கும் ஒரு காலை வேளையில் மாணவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி உரை நிகழ்த்த அனுமதி பெறுங்கள். நிகழ்வின் முடிவில் வாசகர் வட்டங்கள் உருவாக்க ஆர்வமுள்ள மாணவர்களை கையுயர்த்தக் கூறி பின்னொரு வேளையில் அவர் களைச் சந்தித்து குழுக்களாக அமைக்கலாம். மாணவர்களை வாசிக்கத் தூண்டும் நடவடிக்கைகளை வகுப்பறையில் செயற்படுத்தும் விதங்களைப் பற்றி ஆசிரியர்களுடனும் உரையாடலாம். அவர்களுக்கு அதைச் செய்வதற்கான உதவிகளை தருவித்துக் கொடுக்கலாம்.

## 3. பெண்கள் திட்டச் செயற்பாட்டாளர்கள் மட்டத்தில்........

பெண்கள் திட்டங்களில் பணி புரியும் பணியாளர்களையும் பெண்கள் நிறுவனத்தின் அங்கத்தவர்களையும் கலந்துரையாடல்களுக்கு நீங்கள் அழைக்கலாம். ஆரம்பக் கலந்துரையாடல் விடயமாக, பால்நிலைக் கோட்பாடுகள் பற்றிய தெளிவின்மையுடன் பெண்கள் திட்டங்கள் செயற்படுத்துவதன் விளைவுகளை ஆராயலாம். பெண்ணியம் போன்ற விடயங்களைப் பற்றிய தெளிவின்மை திட்டத்தை செயற்படுத்துவதற் கான தடைகளில் ஒன்று என அவர்கள் இனம் காணுவார்களேயா னால் அவர்களைப் பெண்ணிய வாசகர் வட்டங்களாக மாற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் மட்டத்தில்..........

ஒவ்வொரு மாவட்டத்திலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மற்றும் பழைய இடது சாரிக் கட்சிகள் போன்றவற்றில் அங்கத்துவம் வகித்த வர்கள் இருக்கவே இருப்பார்கள். இவர்கள் தற்போதைய சமூக அரசியற் போக்குகளினால் அன்னியமாதலினால் சலிப்படைந்து காணப் படுவர். இவர்களை இனம் கண்டு வாசகர் வட்டங்களாக மாற்றலாம்.

இவர்கள் சில சமயங்களில் ஒரு காலத்திற்குப் பின்பு இயங்காதவர்களாக இருக்கலாம். அப்படியானவர்களை இளம் சந்ததியினருடன் இணைந்து இயங்க விடுவது நன்மை பயக்கும். ஆனால் இதனால் இவர்கள் சகவாசத்தின் பலனாக அந்த இளைஞர்கள் தாமே சலிப்படையாமல் இருப்பதற்கு பார்த்துக் கொள்ள வேண்டும்!

இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்களை அழைத்து ஏதும் இலக்கியம் தொடர்பான சிறு சந்திப்பினையோ கருத்தரங்கினையோ நடத்தலாம். இதன் முடிவில் அவாகள் இலக்கிய வாசகர் வட்டங்களை உருவாக்கு வதற்குத் தூண்டுதல் கொடுக்கலாம்.

அரசியல் ஆர்வலர்களாக அரசியல் கூட்டங்களுக்கு அடிக்கடி சமூகம் தருபவர்களை அழைத்து இனப்பிரச்சனை பற்றியும் புதிய அரசியல் நிலைப்பாடுகளைப் பற்றியும் அறிவதற்கான வாசகர் வட்டங்களை உருவாக்க உதவி செய்யலாம்.

## 5. ஊடகவியலாளர்கள் மட்டத்தில்.......

தற்கால உலக நடப்புக்களைப் பற்றி வாசித்துத் தெரிந்து கொள்வது ஊடகவியலாளர்களுக்கு அவர்களது தொழிலில் அனுகூலம் தரும் செயலாகும். ஊடகவியலாளர்களை ஒரு சந்திப்புக்குத் தருவித்து தற்கால நடப்புக்களைப் பற்றிய விவரணங்களை வாசித்து கலந்துரை யாடுவதற்குரிய தளங்களை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கலாம். தமிழில் எழுதக்கூடிய பத்தி எழுத்தாளர்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பதை ஆராய்ந்து அவர்களுக்கும் பத்தி எழுத்தாளர்களாக வரவிரும்புபவர்களுக்கும் விடயம் சார்ந்த வாசிப்பு வட்டங்களை ஒழுங்கு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் செயல் வட்டங்களை இயக்க ஆரம்பித்தல்

## 1. நிறுவனங்களின் கூட்டமைப்பினைத் தாபித்தல்

ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பற்றிய வாசகர் செயல் வட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமாயின் அந்த விடயத்தில் ஈடுபட்டுள்ள அல்லது அதைப் பற்றிய அக்கறை கொண்டுள்ள நிறுவனங்களின் கூட்டமைப்பு ஒன்றினை நிறுவுதல் அவசியமாகும். இந்தக் கூட்டமைப்பு, எடுக்கப்பட்டுள்ள விடயத்தைப் பற்றிய வாசகர் செயல் வட்டங்களை செயற்படுத்துவதற்கும் அவை தீர்வை நோக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்து கோரப்படும் மாற்றங்களைக் கொண்டுவரவும் மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை மறக்காதீர்கள். எனவே வாசகர் செயல் வட்டங்களுக்காக அமைக்கப்படும் கூட்டமைப்புக்கள் நிரந்தரமானவையல்ல. அவை தாம் அமைக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியதும் செயலிழந்து விடும்.

கூட்டமைப்பின் அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களுடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கும். இந்தச் சந்திப்புக்களில் முதலாவதாக எல்லோரையும் பாதிக்கும் ஒரு பொதுப் பிரச்சினையை இனம் காணும் கலந்துரையாடல் இடம் பெறும். இக்கலந்துரையாடலில் பின்வரும் கேள்விகள் ஆராயப்படும்:

எங்கள் சமூகத்திலுள்ள என்ன நிலைமைகள் எம்மை இங்கு சந்தித்துக் கலந்துரையாட வைக்கின்றன?

இது நீண்ட காலப் பிரச்சனையா? அல்லது ஒரு புதிய திருப்பமா?

எமது சமூகத்தினரின் கணிசமான தொகையினரை இப்பிரச்சனை பாதிக்கின்றதா? எவ்வாறு?

கடந்த காலத்தில் இதனைத் தீர்க்க என்னென்ன வழிமுறைகள் கையாளப் பட்டிருக்கின்றன? அங்கு என்ன நடந்தது?

இதற்கு வாசகர் செயல் வட்டங்கள் உதவமுடியும் என்று ஏன் கருதுகின்றோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் செயல் வட்டங்கள் செயற்படுத்தப்படுவதன் அடிப்படைக் கொள்கைகள்

- தாம் வாழும் சமூகத்தினைப் பற்றிய அக்கறை மக்களுக்கு உண்டு. அதை இன்னும் முன்னேற்ற அவர்கள் விரும்பு கின்றனர்.
- சிக்கலான பிரச்சனைகளுக்கு பலவிதமான தீர்வுகள் தேவைப்படுகின்றன.
- என்ன பின்னணியிலிருந்து வந்திருந்தாலும் சகல மக்களும் ஏதோவொரு முறையில் பங்காற்ற முடியும்.
- பொது வாழ்க்கையில் எத்தனை கூடிய மக்கள் அக்கறை யுடன் ஈடுபடுகின்றனரோ அத்தனையளவு நன்மை எல்லோருக்கும் உண்டு.
- முகத்துடன் முகம் நோக்கிய திறந்த கலந்துரையாடல்களில் எவ்வளவுக்கெவ்வளவு மக்கள் ஈடுபட்டு தங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையையும் நல்ல உறவுகளையும் தாபிக் கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு புதிய கருத்துக்களும் புதிய அணுகுமுறைகளும் உருவாக வாய்ப்புண்டு.
- வித்தியாசமான மக்கள் ஒரு சிக்கலான பிரச்சனையின் பல் வேறு கோணங்களையும் அலசி ஆராய வாய்ப்பு கிடைக்கும் போது தங்களுக்குள் இருக்கக்கூடிய பொது அபிப்பிராயங்களைக் கண்டு பிடிப்பதோடு நல்ல தீர்வு களையும் அடைய முடியும்.
- பொதுத் தளங்களில் தங்களுடைய குரல் ஒலிக்கின்றது என்பதைக் கண்கூடாக மக்கள் பார்த்து விட்டார்களெனில் அவர்கள் சமூக மாற்றத்திற்காக புதிய கருத்துக்களைக் கொண்டு அவற்றைச் செயற்படுத்தி முன்னெடுக்கும் சாத்தியக் கூறுகள் பன்மடங்காகின்றன.
- எவ்வளவு அதிகமாக மக்கள் ஈடுபடுகின்றனரோ அவ்வள வுக்கு அந்நடவடிக்கையின் விளைவு பெரிதாக இருக்கும்.
- தனிநபர்களினதும் ஒரு சமூகத்தினதும் கூட்டு நடவடிக்கை ஒருங்கு சேரும்போது ஆழமான, நிலைத்து நிற்கும் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய கேள்விகளின் மூலம் நடத்தப்படுகின்ற கலந்துரையாடல் களில் எடுக்கப்பட்ட விடயத்தில் வாசகர் செயல் வட்டங்கள் நடத்தப்படுவது அவசியமா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். அவசியம் என்று முடிவெடுக்கப்படுமாயின் இந்நடவடிக்கையின் இலக்குகளைத் தீர்மானிப்பதில் இறங்க வேண்டும். வாசகர் செயல் வட்ட நடவடிக்கையின் இலக்குகளைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் கேள்விகள் உதவும்:

எந்தப் பிரதேசத்தில் இதைச் செயற்படுத்த யோசிக்கின்றோம்?

என்ன வகையான மாற்றங்களை இந்தத் திட்டம் கொண்டுவர வேண்டுமென விரும்புகின்றோம்?

எமது பரந்த இலக்குகள் என்ன? குறிக்கப்பட்ட இலக்குகள் என்ன? (உ.ம்: கல்வியை முன்னேற்றுவது பரந்த இலக்காகும். தாய்மொழியில் சமூகவியல் விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிப்பதை ஊக்குவிப்பது குறிக்கப்பட்ட இலக்காகும்.)

இந்த விடயத்தை எப்படி வடிவமைத்துக் கூறினால் அதில் அக்கறை கொண்டு பங்கெடுக்க அதிகளவு மக்கள் ஆர்வம் காட்டுவார்கள்?

யார் இந்தத் திட்டத்திற்குத் தலைமை வகிக்கக் கூடியவர்கள்? யார் யாரை இணைத்துக் கொள்ள வேண்டும்? இவ்விடயத்தினால் பாதிக்கப்படுபவர்கள் வேறு யார்?

இதையொட்டிய வாசகர் செயல் வட்டங்களையும் நடவடிக்கைகளையும் ஆரம்பிக்க சரியான காலம் எது? இதன் விளைவுகளைப் பாதிக்கக்கூடிய வேறென்ன விடயங்கள் எங்கள் மத்தியில் நடந்து கொண்டிருக்கின்றன?

இத்திட்டத்திற்குத் தேவையான வளங்கள் எவை?


இலக்குகளைத் தீர்மானித்த பின்னர் அந்த இலக்குகளுக்கான சுட்டிகளைத் தீர்மானித்தல் அவசியமாகும். சுட்டிகளைத் தீர்மானிப்பதற்கு உங்கள் இலக்குகளை விளைவுக்கான நோக்கங்கள், விளைவுகளை அடையும் முறைவழிக்கான நோக்கங்கள் என வகைப்படுத்திக் கொள்ளுங்கள். விளைவு களுக்கான நோக்கங்கள் நாம் இந்த நடவடிக்கை மூலம் எதிர்பார்க்கும் மாற்றங்களைக் குறிக்கும். முறைவழிக்கான நோக்கங்களாவன இந்த நடவடிக் கையை செய்து முடிப்பதற்காக நாம் செய்ய வேண்டிய வேலைகளாகும். உதாரணமாக, கல்விக் கொள்கையில் குறித்த மாற்றம் விளைவுக்கான நோக்கங்களில் ஒன்றாகும். அதே போல் இலகுபடுத்துனர்களைப் பயிற்றுவிப் பது முறைவழிக்கான நோக்கங்களில் ஒன்றாகும். அதாவது, இலகுபடுத்துனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகப் பயிற்றுவிக்கப்படுவது திட்டத்தின் விளைவாகக் கருதப்படா விட்டாலும் நாம் குறித்த விளைவுகளைப் பெறுவதற்கு நல்ல பயிற்றுவிக் கப்பட்ட இலகுபடுத்துனர்கள் தேவையென்பதனால் அவர்களைப் பயிற்று விப்பதும் ஒரு நோக்கமாகின்றது.

எனவே, விளைவுகளுக்கான நோக்கங்களின் சுட்டிகள் அனேகமாக திட்டம் கொண்டுவர எண்ணும் மாற்றங்களைப் பற்றியதாகத்தான் இருக்கும். இவை ஒரு புதிய சட்டம், புதிய நடைமுறைகள், அல்லது மக்கள் மத்தியில் நடத்தை மாற்றங்கள் போன்றவையாக இருக்கும்.



முறைவழிக்கான நோக்கங்களோ வாசகர் செயல் வட்டங்களில் கலந்து கொண்ட எண்ணிக்கையினர், அவர்களின் மத்தியில் காணப்பட்ட பன்முகத் தன்மைகளின் அளவு, இதற்காகப் பயிற்றப்பட்ட இலகுபடுத்துனர்களின் எண்ணிக்கை, அவர்களின் செயற்பாடுகள், வாசகர் செயல் வட்டங்கள் மாற்றத்திற்காக செயற்படுவதற்கு அவற்றிற்குக் கிடைத்த ஆதரவுத் தளங்கள், என்று இவ்வாறாகப் பலவாகும்.

நோக்கங்களையும் அதற்குரிய சுட்டிகளையும் தீர்மானித்தற்குப் பின்னர் வேலைகளைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை இடம் பெறும். தீர்மானிக்கப்பட்ட கால வரையறையில் இயங்க வேண்டிய உப குழுக்கள் இதற்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தெடுக்கப்படும். உதாரணமாக, இலகுபடுத்துனர் பயிற்சிக்குப் பொறுப்பு எடுக்கும் குழு, வாசகர் வட்டங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டிய நூலைத் தயாரிக்கும் பொறுப்பு கொண்ட குழு, அங்கத்துவ நிறுவனங்களுக்கு மத்தியில் வாசகர் செயல் வட்டங்களைத் தாபிப்பதற்குப் பொறுப்பெடுக்கும் குழு, பொது மக்களுடனும் ஊடகங்களுடனும் தொடர்பாடுவதைப் பொறுப்பெடுக்கும் குழு, நிதிகளையும் வளங்களையும் திரட்டுவதற்குப் பொறுப்பெடுக்கும் குழு என்று இவ்வாறு தேவையான உபகுழுக்களை உருவாக்கலாம். இவையெல்லாம் எப்பொழுதெல்லாம் சந்தித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து வையுங்கள். வேலையை ஆரம்பியுங்கள்.



## 1. பொதுக்கூட்டத்தினைக் கூடுதல்

அடுத்து ஒழுங்கு செய்யவேண்டியது பொதுக்கூட்டமாகும். வாசகர் செயல் வட்டங்களின் கலந்துரையாடலுக்கென எடுக்கப்படும் விடயத் தைப் பற்றியும், வாசகர் செயல் வட்ட நடைமுறைகளைப் பற்றியும், அக்கறையுள்ள பொது மக்களுக்கும், தீர்மானம் எடுப்போருக்கும், ஊடகங்களுக்கும் தெரிவிப்பதே இந்தக் கூட்டத்தின் பிரதானமான நோக்கமாகும். பொதுக்கூட்டங்கள் தரும் பிரபல்யத்தினால் வாசகர் செயல் வட்டங்களில் பங்குகொள்ளும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளில் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்பாக, மாதிரி வாசகர் செயல் வட்டங்களை பரீட்சார்த்த ரீதியாக செயற்படுத்திப் பார்க்கவும் நீங்கள் முயற்சிக்கலாம். இதன் மூலம் பொதுக் கூட்டத்தில் எழக்கூடிய கேள்விகளை நீங்கள் கூடிய தன்னம்பிக்கையுடன் கை யாளும் நிலை உருவாகின்றது. எப்படியிருப்பினும், பொதுக்கூட்டத்திற்கு முன்னரேயே இலகுபடுத்துனர்களின் பயிற்சி ஓரளவுக்காயினும் முடிவடைந்திருத்தல் நன்று.

## 2. திட்டச் செயலாக்கமும் கண்காணிப்பு மீளாய்வும்

இங்கு, ஏற்கனவே வாசிப்பு வட்டங்களாகத் தங்களை ஒழுங்கமைத்துக் கொண்டு இயங்கும் குழுக்களையும் செயல் வட்டங்களாக மாற்றி நீங்கள் பயன்படுத்தலாம், புதிய வாசகர் செயல் வட்டங்களையும் உருவாக்கலாம். வாசகர் செயல் வட்டங்கள் எடுக்கப்படும் பிரதேசத்தில் ஒரே நேரத்தில் எங்கும் இயங்க ஆரம்பிக்கின்றன. சுட்டிகளை நிச்சயப் படுத்தும் முறைகளை நிர்மாணிப்பதும் உங்கள் நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்கும். அவற்றுக்கு சில உதாரணங்கள் கீழே தரப் பட்டுள்ளன:

- வாசகர் செயல் வட்டங்களில் என்ன வகையான மக்கள் பங்கு பற்றுகின்றனர் என்பதை அறிய ஒரு ஆய்வொன்றை மேற் கொள்ளலாம்.
- வட்டங்கள் ஒவ்வொன்றும் என்ன விதமான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றன என்பதை அறிய இலகு படுத்துனர்களின் அறிக்கைகள் தொடங்கி ஊடக அறிக்கைகள் வரை கண்காணித்துக் கொண்டிருக்கலாம்.
- ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இலகுபடுத்துனர் களை அழைத்து அவர்கள் தம் அனுபவங்களை ஒருவரோ டொருவர் பகிர்ந்து கொள்ளும் சந்திப்புக்களை ஒழுங்கு செய்ய லாம். இச்சந்திப்புக்களில் அவர்களின் நடடிவக்கைகளின் வெற்றி களும் முகம் கொடுக்க நேர்ந்த சவால்களும் வெளிவரும். இது மேலே திட்டத்தைக் கொண்டு போவதற்குப் பயனளிக்கும்.

  இலகுபடுத்துனர்களையும் பங்குபற்றுனர்களையும் மீளாய்வுப் படிவங்களைக் கொடுத்து அவற்றை நிரப்ப ஊக்குவிக்கலாம். ஏற்படுத்தப்பட்ட புதிய உறவுகள், நிறுவன ரீதியான புதிய தொடர்புகள் போன்றவற்றை மீளாய்வுப் படிவங்களில் கேட்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாதீர்கள். ஏனெனில் இவைதான் வாசகர் செயல் வட்டங்களின் முக்கியமான பக்க நன்மைகளாகும்.

## 3. நடவடிக்கைக்கான பொது அரங்கு

இதனை வாசகர் செயல் வட்டங்களின் சந்திப்புக்களின் முடிவில் ஏற்பாடு செய்யலாம். ஒவ்வொரு வட்டத்திலும் நிகழ்ந்தவை பற்றிய சுருக்கமான அறிக்கையினையும் அவை என்னென்ன நடவடிக்கைகளைப் பரிந்துரைத்திருக்கின்றன அல்லது செயற்படுத்த உத்தேசித்துள்ளன என்பதைப் பற்றிய விவரங்களும் இங்கு வெளிவிடப்படும். ஆரம்பத் தில் நிகழ்ந்த பொதுக்கூட்டம் போலவே அக்கறை கொண்ட பொது மக்களும் ஊடகங்களும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களும் இதற்கு அழைக்கப்படுவர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை ஒரு கண்காட்சியாக எற்பாடு செய்தும் சுவாரசியமாக்கலாம். ஒரு மண்டபத்தில் ஒவ்வொரு வாசகர் செயல் வட்டங்களிலிருந்தும் அதில் செயற்பட்ட தமது அனுபவங்களை சித்தரிக்கும் வாசகங்களை பார்வைக்கு விடலாம். அதே போல் ஒவ்வொரு வட்டத்தினது அறிக்கைகளையும் ஆங்காங்கே பார்வைக்கு வைக்கலாம். விரும்பிய பங்குபற்றுனரை அழைத்து தமது அனுபவம் பற்றிப் பேச விடலாம். வாசகர் வட்டங்களின் புகைப்படங்களைத் தொங்க விடலாம்.

இந்தப் பொதுக்கூட்டத்தின் முடிவில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டம் எல்லோருக்கும் முன்பு வைக்கப்பட்டு அவர் களுடைய அங்கீகாரத்தைப் பெறும். தேவையேற்படில் அதற்கான புதிய செயலணிகள் உருவாகலாம்.

## வாசகர் செயல் வட்டங்களின் விளைவுகள் !

- புதிய கற்கை
- புதிய உறவுகள்
- பிரச்சனைக்குரிய விடயத்தை தமதாக்கிக் கொள்ளும் புதிய நடைமுறைகள்
- புதிய தலைமைத்துவங்கள்
- புதிய கூட்டிணைப்புக்கள்
- புதிய கொள்கைத் திட்டங்கள்
- சமூகம் ஒன்று சேர்ந்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான புதிய முறைவழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுபடுத்துனர்களுக்கான
# பயிற்சி மீளாய்வுப் படிவம்

இடம் :.......................................... திகதி :..............

பெயர் : ..........................................

இலகுபடுத்துனராக நீங்கள் முன்வருவதற்கான காரணங்கள்

..................................................................................

..................................................................................

முன்பு இது போன்ற பயிற்சிகளில் கலந்து கொண்டிருக்கிறீர்களா? ஆம்/ இல்லை

ஆம் எனில் விவரிக்க ..........................................................

..................................................................................

..................................................................................

பயிற்சி உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்ததா? 1 2 3 4 5 6 7 8 9 10 ( ஏறு வரிசையில் ) ஏன்?

..................................................................................

..................................................................................

நீர் பயிற்சியில் கற்றுக் கொண்ட புதிய விடயம் இருக்கின்றதா? ஆம்/ இல்லை

ஆம் எனில் அது அல்லது அவை யாவை? ........................

..................................................................................

..................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் செயல் வட்டங்கள் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்ளும் விஷயம் என்ன?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

உங்களுக்கு விளங்காத அல்லது அலுப்புக் கொடுத்த விஷயம் / அமர்வு என்ன?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

இலகுபடுத்துனராக இயங்குவதற்கு நீங்கள் தயாராக உள்ளீரா?

உடனடியாக (     )

இன்னுமொரு பயிற்சிக்குப் பின்பு (     )

ஏன்? ..........................................................................................

இன்னும் சிறப்பாகப் பயிற்சியை நடத்துவதற்கு பயிற்சியாளர்களுக்கு நீங்கள் வழங்கக்கூடிய ஆலோசனை என்ன?..........................................

....................................................................................................

....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org